முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சக்தி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

10.12.2018, திங்கட்கிழமை

1. **ஞானயோக வள்ளலே அரங்கா**
**ஞானயுகம் படைக்கும் நோக்கில்**
**தானதருமம் பெருக்கி நின்று**
**தனிப்பெருஞ் சக்தியாக அருள் புரியும்**
2. அருள்புரியும் ஆறுமுக அரங்கா
அகிலமதில் உன் பெருமை கூறி
பொருள்பட ஒளி சூட்சும நூலை
புகலுவேன் **விளம்பி தேள் திங்கள்**
3. **திங்களிலே அறுநான்கு திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 24ம் நாள் 10.12.2018, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு சக்தி நாயனார் யானும்**
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார மகா சக்தியாக வந்த
4. வந்தநல் ஞானியர் வழிகள்தனை
வையகத்தார் வணங்கி ஏற்றிட
சிந்தை தெளிவும் சிறப்பான வாழ்வும்
செகமதனில் சகல பாதுகாப்பும் அடைவர்
5. அடையவே அரங்கன் சேவையாம்
அறம் வளர்க்க பொருளுதவி
தடையற செய்து வருபவர்களும்
தனவளம் தக்க தேகமனோபலம்
6. பலமான சம்பத்து துணையும்
பாருலகில் ஆயுள் கீர்த்தியும்
வளமான நிலையும் கூடி சிறப்பர்
வல்லமைபட தன்னலம் கருதா
7. கருதா அரங்க மகானின்
கருணைமிக்க கொள்கை வளர்க்க
உறுதிபட உடல் பொருள் மனமென
உழைப்பாக சரணடைவு கொண்டவர்கள்
8. கொண்டவர்கள் குடும்பநலம் படவும்
குறையிலா சமூக பாதுகாப்புடனும்
தொண்டு வழியே கருமவினை வென்று
தேசிகன் தயவு மிகவும் கிட்டி
9. கிட்டியே இல்லறத் தொண்டர்கள்
குறையிலா இல்லற ஞானியாவர்
தட்டாது அரங்கன் ஆசிபட
தவமாக பிரம்மச்சர்யம் கடைப்பிடித்து
10. கடைப்பிடித்து தொண்டிலிருப்பவரும்
கடைத்தேற்றம் காணும் மக்களுள்
சோடை போகா முதல் நிலை பெற்று
சுப்பன் தேடும் ஞானிகள் ஆவர்

11. ஆகவே அறம் வளர்க்கும் அருள் மணக்கும்
ஆறுமுகனார் ஏழாம் படை வீட்டை
வகைபட கலந்தவர் எல்லாம் தேறுவர்
வழங்கிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சக்தி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அரும்பெரும் யோகங்களைச் செய்து வெற்றி கண்டிட்ட வள்ளலே, வள்ளல் ஞானியே ஞானயோகியே அரங்கமகா தேசிகனே ஞானயுகத்தினை படைக்கின்ற நோக்கத்திலே உலகினில் அளவிலாது தானதருமங்களைச் செய்து தருமசக்தியைப் பெருக்கி தனிப்பெருஞ் சக்தி வடிவமாக நின்று அருள் புரிகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் உமது பெருமைகளைக் கூறியே இவ்வுலகினில் முருகப்பெருமானின் தலைமையில் ஞானஆட்சி அமைந்திடவே ஒளி சூட்சும நூல்தனையே சக்தி நாயனார் யானும் **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 24ம் நாள் 10.12.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே உரைக்கின்றேன் என்கிறார் மகான் சக்தி நாயனார்.

ஓங்கார சக்தியாகிய முருகப்பெருமானின் மகா சக்தி வடிவமாக அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானக்கொள்கைகளை தர்மத்தினால் ஆன தூயநெறிகளை உலக மக்களெல்லாம் வணங்கி ஏற்று கடைப்பிடித்திட்டால் அவரவருக்கும் அறிவு தெளிவு பிறக்கும் சிறப்புமிக்க வாழ்வும் இவ்வுலகினில் அவர்கள் சகலவிதமான பாதுகாப்புகளையும் பெற்று மகிழ்வான வாழ்வினை வாழ்வார்கள்.

இவ்விதமாய் சகல பாதுகாப்பையும் அவர்கள் பெற்றிட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலக நலனிற்காக ஆற்றுகின்ற மகா தர்மங்களில் அறம் வளர்க்க பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் வர வேண்டும்.

அரங்கனின் அறம் வளர்க்க பாடுபட்டோர் எல்லாம், நல்ல உடல் ஆரோக்கியமும் மனோதிடமும், திடமும் பெறுவதோடு பொருளாதார மேன்மையும் பொருள் சேர்க்கையையும் பெறுவார்கள். நல்ல பிள்ளைகளை பெற்று மகிழ்வதோடு தகுந்த இல்லற துணையையும் அடைந்து நீடிய ஆயுளைப் பெற்று சுற்றம் சூழ மகிழ்வுடன் வளமான வாழ்வை வாழ்ந்து சிறப்படைவார்கள்.

தன்னலம் இன்றி பொதுநல நோக்கில் நடைபெறும் ஆறுமுக அரங்கமகா தேசிகனின் கருணைமிக்க கொள்கைகளை வளர்க்கவும் உலகமெலாம் பரப்பவும் உறுதியுடன் உடல், பொருள், மனம், உழைப்பு என அனைத்தையும் சரணாகதியாக அரங்கன் திருவடிகளே தஞ்சம் என தஞ்சமடைந்து செய்கின்றவர்கள் அவர்களது குடும்பம் சிறப்படையும், குறைவின்றி நிறைவான சமூக பாதுகாப்பை பெறும், அவர்கள் செய்யும் தொண்டின் பலனால் அவர்களது தொண்டின் மூலமாக கருமவினைகளை வெல்வார்கள். அவர்களுக்கு மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவும் மிகுதியாக கிடைத்து இல்லறவாசிகளாக இருந்தபோதும் அவர்களது தொண்டு பலனாய் இல்லற ஞானிகளாக ஆகி சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசிகளுடன் தவமாக பிரம்மச்சரியத்தினை கடைப்பிடித்து தளராது தொண்டு செய்து வருகின்றவர்கள் ஜென்மத்தைக் கடைத்தேற்றும் மக்களுள் வீண் போகாதவர்களாய் முதன்மையான நிலையைப் பெற்று முருகப்பெருமான் விரும்புகின்ற ஞானிகளாக ஆகிடுவார்கள்.

ஆதலினால் உலக மக்களே அறம் வளர்க்கின்ற அருள் மணக்கும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை மனம் விரும்பி ஏற்று பயபக்தியுடன் குடில் நாடி வந்து குடில் தொண்டில் கலந்து தொண்டுகளைச் செய்கின்றவர்கள் எல்லாம் உறுதியாக கடைத்தேறுவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சக்தி நாயனார்.

–சுபம்–